**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 173/2019**
**U/s. 505(1)(b),353,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 4 (LW. 4)**

| | | |
|---|---|---|
| **Name** | : விஸ்வநாதன். (உதவி ஆய்வாளர்) | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

**1,2,3** எதிரிகள் ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.173 /2019 13.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.29 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் நாகப்பட்டினம் கீழையூர் கடற்கரை காவல்நிலையத்தில உதவி ஆய்வாளராக இருந்து கடந்த 31.01.2026 ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.02.2019 ம் தேதி நான் தஞ்சை நகர மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதியம் 13.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திருமதி.தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை, முதல் நிலை காவலர் திருமதி. நிறைமதி ஆகியோருடன் தஞ்சை பழைய பேருந்து நிலையம் கும்பகோணம் வழித்தடத்தில் ரோந்து சென்றபோது அங்கு 3 நபர்கள் அரசுக்கு எதிராக கோஷம் போட்டு கொண்டிருந்தார்கள். அவர்களை உதவி ஆய்வாளர் ஏன் அரசு எதிராக கோஷம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு நீங்கள் எ்ங்களை தடுக்க கூடாது , கட்டையால் அடிப்போம்,தீயிட்டு கொளுத்துவோம், என்று உதவி ஆய்வாளர் அவர்களை பணி செய்ய விடமால் தடுத்தார்கள். மக்கள் அதிகார அமைப்பை சேர்ந்தவர்கள் ஆஜர் எதிரிகள் ராஜேந்திரன், மதுரைவீரன், பால்ராஜ் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்தும், 13.30 மணிக்கு 3 கட்டைகள், துண்டுபிரசுரங்கள் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி காவல் ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க பொதுமக்கள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைபற்றுதல் மகசரில் நானும், அண்ணாதுரையும் கையொப்பம் செய்தோம். மதியம் 14.00 மணிக்கு கைப்பற்றி நிலையம் கொண்டு வந்து குற்ற எண் 100/2019 சட்டபிரிவுகள் 505(1)(b),353,506(2)இதசவின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது . எங்களை உதவி ஆய்வாளர் இது சம்மந்தமாக விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும்

கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1,2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** பழைய பேருந்து நிலையம் என்பது 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டுளளது என்றால் சரிதான். கும்பகோணம் நடைமேடையை தவிர 50 பேருந்துகள் நின்று கொண்டிருந்தன என்றால் சரிதான். பேருந்து நிலையத்தில் சுமார் 500–600 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். யாரிடமிருந்து எவ்வளவு நீளம் , என்ன தன்மை கொண்ட கட்டை என முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். 3 கட்டைகள் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் துண்டு பிரசுரங்கள் என்ற மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என்ன வாசகம் எழுதப்பட்டிருந்து என்றால் அரசுக்கு எதிராக எழுதப்பட்டிருந்தது. அதில் என்ன வாசகம் எழுதப்பட்டிருந்து என்றால் அடக்குமுறைக்கு எதிராக என்று இருந்தது. மத்திய , மாநில அரசுகளில் எந்த அரசுக்கு எதிராக அந்த வாசகம் குறிப்பிடப்பட்டிருந்து என்றால் அரசுக்கு எதிராக என மட்டும் தான் இருந்தது. என்னை உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி விசாரித்தார். தனிநபர் சாட்சிகள் நாங்கள் யார்யாரை விசாரித்தோம் யார் யார் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை என்று சொல்லமுடியுமா என்றால் அங்கு இருந்த சில நபர்களை விசாரித்தோம். அவர்கள் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை.

2. சம்பவம் நடந்ததாக நாங்கள் சொல்லும் இடத்திற்கு அருகில் அரசு போக்குவரத்து கழகத்திற்கான அலுவலகம் இருந்ததாத என்றால் இருந்தது. அங்கிருந்த கடையில் உள்ள நபர்கள் , பொதுமக்கள் யாரும் பாதித்ததாக கூறியும் எதிரிகள் அரசுக்கு எதிராக துண்டுபிரசுரங்கள் கொடுப்பதாகவும் எங்களிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தீயிட்டு கொழுத்திவிடுவதற்கான ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் தட்டச்சு செய்யப்பட்டு மாதிரி படிவமாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் இடது பக்கம் படிவமாக உள்ளது. வலது பக்கத்தில் கையால் எழுதப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசர் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் ஆவணம் என்றாலும், சம்பவயிடத்திற்கு எடுத்து செல்வதில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் சம்பவம் நடைபெற்ற பிறகு சம்பவயிடத்தில் தயார் செய்யப்படும் என்றால் சரிதான். துண்டுபிரசுரங்கள் எத்தனை என்று , குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகசரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. எதிரிகள் யாரிடம் துண்டுபிரசுரங்கள் கொடுத்தார்கள் என்று புகாரிலோ, வாக்குமூலத்திலோ, முன்விசாரணையில் இல்லை என்றால் சரிதான். இந்த நபரிடம் தான் கொடுத்தார் என்று நாங்கள் எந்த நபரையும் விசாரிக்கவில்லை

என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் எந்த துண்டுபிரசுரமும், யாரிடமும் விநியோக்கவில்லை என்றும், நான் சொன்னதுபோல் எதிரிகளிடமிருந்து எந்த துண்டுபிரசுரங்களும், கட்டைகளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. எங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருள்கள் கைப்பற்றுதல் மகசர், காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்ப தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் 14.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து அழைத்து சென்று காவல்நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்கள். எதிரிக்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 173/2019**
**U/s. 505(1)(b),353,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 5 (LW. 7)**

| | | |
|---|---|---|
| **Name** | : முகமது அப்பாஸ் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

**1,2,3** எதிரிகள் ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.173 /2019 13.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.10**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் ரயிலடி, ராஜராஜன் தியேட்டர் அருகில் குடியிருந்து தள்ளுவண்டியில் பழகடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தஞ்சை பேருந்து நிலையத்திற்கு கும்பகோணம் செல்வதற்காக கடந்த 13.02.2019ம் தேதி மதியம் 3.00 மணியளவில் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார். அதில் நானும், துரைராஜ் என்பவரும் போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் செய்தோம்.

**<u>1,2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் படம் வரைந்திருநத தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வேறு எதிலும் நான் கையெழுத்து செய்யவில்லை. நான் வெள்ளை தாளில் கையெழுத்து போடவில்லை. நான் பழைய பேருந்து நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். பழைய பேருந்து நிலையத்தில் வடக்கு கடைசியில் கையெழுத்து போட்டேன் என்றால் கும்பகோணம் பேருந்து நிறுத்ததில் கையொப்பம் செய்தேன். பேருந்து நிலையத்தில் கூட்டமாக இருந்தது, நான் கூட்டதிலிருந்து தனியாக நின்று இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் கையெழுத்து செய்யாமல் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க சம்பவயிடத்தில் கையெழுத்து செய்தேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டமாக இருந்த இடத்தில் என்ன

நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கூட்டமாக இருந்த இடத்தில் தான் போலீசாரும் நின்று கொண்டிருந்தார்கள். என்னுடன் துரைராஜ் என்பவர் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.